**Tamil Nadu Pollution Control Board**

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING EXTENT OF 1.13.0 Ha FOR THIRU. R.SATHISH KUMAR ROUGH STONE AND GRAVEL QUARRY AT S.F. NO. 203/1B IN ORATTUKUPPAI VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT at M/s. GAYATHIRI MAHAL, CHETTIPALAYAM, COIMBATORE DISTRICT ON 29.05.2025 AT 11.00 A.M.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt.K. Senthil Vadivu | : | **Special District Revenue Officer (Land Acquisition) State Highways Coimbatore District** |
| 2. | Dr. R. Chandrasekaran | : | **District Environmental Engineer** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Thiru.S.Senthil Kumar | : | **Assistant Environmental Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru.B.Swaminathan | : | EIA Consultant **M/s. Creative Engineers and Consultants, Chennai** |
| 5. | Public | : | 92 |

*****

The proposed Thiru.R.SathishKumar Rough Stone and Gravel Quarry Project at Orattukkupai Village, Madukkarai Taluk, Coimbatore District has a total area of 1.13.00 hectares. The District Revenue Officer, the public to attend public hearing and the quarry owners were welcomed by the District Environmental Engineer, Coimbatore TNPCB South According to the 2006 Environmental Impact Assessment Notification of the Union Ministry

of Environment, Forest and Climate Change, GOI it is necessary to obtain prior environmental clearance for 8 types of industries, and while obtaining such prior environmental clearance, it is a rule to obtain the views of the public and record it and submit the same to the State Environmental Impact Assessment Authority. Accordingly, he informed that the details of this public hearing had already been published in the Tamil and English dailies, Dinamalar and Indian Express respectively on 22.04.2025 and the Environmental Impact Assessment Report and Project Summary were placed for public viewing at the necessary offices. Further, the information about this meeting has been announced through Flex boards at two prominent places in the village and handouts have been distributed to the public. The photographs of which are shown here. He further informed that on behalf of the quarry owners, the project consultant will explain the details of ordinary stone and gravel quarry to the public and after that, the public will be asked to register their views regarding the project. All this audio and video recording of proceedings will be submitted to the Tamil Nadu State Environmental Impact Assessment Authority.

The District Revenue Officer inaugurated the public consultation meeting and said that the purpose of the meeting is to record the environmental comments raised by the public. Later, the project consultant of the ordinary stone and gravel quarry project gave a presentation on the proposed ordinary stone and gravel quarries.

Following this, the Environmental Impact Assessment Consultant of the Rough Stone and Gravel Quarry, Thiru.B.Swaminathan, M/s. Creative Engineers and Consultants, Chennai, has welcomed everyone and gave a detailed explanation through a video presentation about the proposed ordinary stone and gravel quarry and the environmental management plan to be implemented during its implementation.

Then, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South, said that the public's comments on the ordinary stone and gravel quarry project, which was currently being explained in detail through a video presentation, can be recorded and they will be recorded on the video as well.

Accordingly, the public recorded their following comments and suggestions.

1. **Thiru.Nagaraj, Chettipalayam:**

Good Morning to the District Revenue Officer and the District Environmental Engineer. Good Morning to everyone here. I come from Chettipalayam. We want this quarry to come here. We fully agree with it. Because of reason that it will provide employment to many people. Many people like loadman of trucks will get employment. Therefore, we fully agree with this quarry coming here. Thank you.

2. **Thiru.Satish, Orattukuppai:**

Good Morning sir. My name is Satish. I come from Orattukuppai. This quarry will provide employment to many people directly and indirectly. We fully agree with the quarry coming here, we have no objection. Thank you.

3. **Thiru.Soundararajan:**

I would like to express my greetings to the District Revenue Officer and the District Environmental Engineer and every one who are attending public hearing. It is very essential that the quarry comes to this area. Ten families of construction workers like me depend on this. It is very necessary. The funds generated from the mineral resources sector shall be spent to public. I am saying goodbye by thanking for the opportunity.

4. **Thiru.Soumya, Orattukuppai:**

Hello, my name is Soumya. I come from Orattukuppai. If this quarry comes, the demand for stones will be low. Thus, rate will be reduced. It will be useful for everyone. That is why we agree to the quarry coming.

5. **Thiru.Aadish:**

Hello everyone. My name is Aadish, when the quarry begins everyone in the construction sector will get materials.

6. **Thiru.Shanti, Orattukuppai:**

My name is Shanti. I come from Orattukuppai. I agree to give license to Satishkumar.

7. **Thiru.Yogesh, Orattukuppai:**

Hello. I come from Orattukuppai . My name is Yogesh. I have no objection to give a license to Satishkumar.

8. **Thiru.Sureshkumar, Mayil & Co, Orattukuppai** :

Good Morning. I come from Orattukuppai. My company is Mayil & Co Builders. Ten people depend on me. When the stone quarry was there, the material was available at a low price. Now it is in high demand. It has to be purchased from outside.

9. **Thiru.Shanmugam, Orattukuppai :**

Hello everyone. My name is Shanmugam. I come from Orattukuppai , Chettipalayam. I request you to give him permission to set up this stone quarry.

10. **Thiru. Vinod Kumar, Periya Kuili :**

Hello everyone. My name is Vinod Kumar. I come from Periya Kuili. Since all the quarries do not get permission, the prices of all the construction materials are increasing. This is affecting everyone. Therefore, I would like to inform you that if the licensing process is regularized and issued soon, everyone will be benefitted. Thank you.

11. **Thiru.Karthik, Periya Kuili:**

My name is Karthik. I come from Periya Kuili. Now there is a shortage of job opportunities for all drivers and operators. If many such quarries are commisioned, the job shortage will be eliminated. The demand for material is also very high. If there are many quarries, the material demand can be met. That is why I think it is good to give a license to the quarry.

**12. Thiru. Madhavan, Orattukuppai:**

Good Morning everyone. My name is Madhavan. I come from Orattukuppai . It is good to give a license to this quarry. So a lot of laborers will be benefitted. Let's give a license. Thank you

**13. Thiru.Kalai Sivam, Chettipalayam.:**

Hello everyone. I come from Chettipalayam. We have no objection to give a license to this quarry. Because of this, many people here will get direct and indirect employment opportunities. We fully agree to this.

**14. Thiru.S K Prabhu, Chinniampalayam:**

My name is Prabhu. I come from Chinniampalayam. Construction is very affected due to the shortage of raw materials. I hope that this will reduce the demand a little.

**15. Thiru.Bharani, Chettipalayam:**

Hello. My name is Bharani. I come from Chettipalayam. I have no objection to give a license to this quarry. Moreover, since the Government is doing a lot of projects, there is no proper supply of any construction materials for it. Only forty percent of the supply is being made. The rest is in demand. That is because of non availability of the raw material. All the materials are made from stone. That is why I request the Government shall take action and give the license as soon as possible. Thank you.

**16. Thiru.Murugan, Kallappalaiyam:**

Hello. I come from Kallappalaiyam. There is a demand for raw material on all sides. That is why the workers are suffering a lot. By giving a license to this quarry, many common people will get employment opportunities. I think there is no harm in giving the license.

**17. Thiru. Velusamy, Periya Kuili:**

My name is Velusamy. I come from Periya Kuili. Since all the quarries are closed, it is difficult to get stone and gravel. The price is high because it is bought from outside the state. That is why I have no objection to giving a license to Sathish Kumar.

**18. Thiru. Lokesh, Chettipalayam:**

Hello everyone. My name is Lokesh. I come from Chettipalayam. I have no problem with this quarry. Because when the quarry is open, everyone will get more job opportunities. Thank you.

**19. Thiru.Arushamy, Pachapalayam.**

Because of non-availability of stone, all business are stopped still. We request that permission be given soon.

**20. Thiru.Vijayakumar:**

My name is Vijayakumar. I have come from the area where this stone quarry is going to start. We have not given any notice about public hearing. No body is related to this quarry. We were not given any information, for this meeting is being held for the general public. Public present here are not related to this quarry location. No notice was given.

**District Environmental Engineer:** Which town are you from?

**Vijayakumar**: Orattukkubai

**District Environmental Engineer:** Do they have advertisements in Orattukkubai?

**Vijayakumar:** They haven't given any.

**District Environmental Engineer:** Wait, listen to what I'm saying. He also enquired the place where hand out was given in Orattukkuppai?

**Vijayakumar**: Ask them to show you a photo of where they have been placed.

**District Environmental Engineer:** Wait a minute, The Project consultant showed the photo.

**Vijayakumar:** This area is not related to our places.

**District Environmental Engineer:**

Wait a minute. According to the law, advertisements should be given in two dailies. We have given notices and flex banners like this so that the more public can come and express their views. It is not legal. This awareness campaign is carried out in addition to the legal procedures.

**Vijayakumar:**

My land boundary is adjacent to the quarry. They have given notices in an irrelevant place. Shouldn't they have given notice to me? Notices have not been given to the relavent people. They have kept the meeting secret. They have not given notice to anyone in the area. The quarry was operates by disconnecting the road between two Villages. This time also applied like wise. We have given many notices we take steps to get a stay order. Because they have given notices in an irrelevant place and not to us. Shouldn't they have done something about it?

**District Environmental Engineer:**

Tell us your views. Tell us that you have not received the notice. We can record it.

**Vijayakumar:**

Why was the notice not given? We are the most affected persons. There are many people not related to this project. We are affected due to air and water Pollution. Why notice was it not given to us? Why should you hide it? You are hiding it because you are making a mistake.

**District Environmental Engineer**: You should not talk unnecessarily.

**Vijayakumar:** We did not talk unnecessarily. Shouldn't we have been given a notice?

**District Environmental Engineer**: Listen quietly, we have done what is required by law.

**Vijayakumar**: Okay.

**District Environmental Engineer:** According to law, we should give an advertisement in two daily newspapers.

**Vijayakumar:** Okay

**District Environmental Engineer**:

We have made an additional efforts to invite more people to involve in public hearing through placing flexboard and distribution of handouts. We have recorded your comments. If you have any other comments, please tell us

**Vijayakumar**: No. Nothing. From one village to another

**District Environmental Engineer**: Don't keep repeating the same thing, sir

**Vijayakumar**: Okay

**District Environmental Engineer**: You have said it once

**Vijayakumar**: Okay

**District Environmental Engineer**:

If you have any other comments, please tell us. The comments you made have been recorded. That it the notice was not received. Are there any other comments?

**Vijayakumar:**

No. Due to this, the smell of explosives is coming from the quarries in our area. We are already very affected. The storage level of water has gone very low. There is no clean water. Even the quarrymen are selling the stored water from pits. There is no use to nearby farmers. We are already raising objections every time, despite number of the quarry is increasing. But the Government is not doing anything as per the rules.

**District Environmental Engineer**: Tell me, sir, tell me your views.

**Vijayakumar:** I am telling you.

**District Environmental Engineer**: Water is being affected, land is being affected, tell me.

**Vijayakumar:** Water is being affected, air is also being affected.

**District Environmental Engineer**: Tell me like that.

21. **Thiru.Jayapal**:

My name is Jayapal. We are from place where the quarry is nearer. As my brother says, they have brought people from all over the town and made them talk in this meeting we are not aware of this public hearing. We have come here from ten directions. This quarry and Government quarry are nearby 10 feet distance.

Survey numbers are also adjacent to each other. These two quarries are very deep and there may be chances of accident. They have encroached the water stream. There is no place of safety.

Our wells are 70 feet depth. But quarry has done more than the above depth. Hence, over water is flowing to the quarry. Many houses are cracked and we felt vibration. The roof we have erected is made up of cement sheets only M/s Ultra Sahara was taken more than they are permitted. They have dug up the entire soil and closed the quarry and applied for a new license. If you are giving licenses to everyone, where will all the gardeners nearby go? Similarly, the height of your quarry is high, and our garden is in a low area. Hence air pollution is high in our area. They are putting rigs. When they put out rigs, the house shakes and everyone here feel fear. The quarry people are relatives only. Who will solve our problem, where will we go to solve it?

**District Environmental Engineer:**

Sir, tell us your views. Others have already told us their views.

**Jayapal:**

People living ten kilometers away from here don't know the problem.

**District Environmental Engineer:**

We are listening to your views. You should not talk about others. This is a public hearing . Otherwise, give a petition to mines department if necessary.

**Jayapal**:

My opinion is that the distance between one quarry and another is too small, so no license should be given.

**District Environmental Engineer**: Is anyone else speaking?

**22. Tmt.R.Rajeshwari, Thoppaiyan kadu:**

Hello everyone. I come from Thoppaiyankadu and I am right next to them. Previously, somebody was quarrying. There was no stream at that time and no objection was raised. Now we have purchased land and the road is far away. However, they are raising objections. All the stones that were broken by other people and we are not involved in it. There is no harm in breaking the stones. Thank you and greetings.

**23. Thiru.Velusamy**

Hello District Collector, I am here before them. My name is Velusamy. They are far away from this quarry. They are almost half a kilometer away from the quarry, and I am within 1000 feet. I have also built a house there, and lived there for 50 years. There is no such vibration. The quarry has been working for a long time. As they say, there is no chance of water level decreases due to this quarry. If there is rain, the ground water will be raised. The existence of the quarry is good for them. They take the water from the quarry and release it into the earth. They do their farming with that water. There are seven or eight farmers there who rely on the quarry and use the water from the quarry for their farming. The complaint people are far away from the quarry. But there is no chance of vibration or any

other impact like they are telling. You must have seen and confirm. If you want, visit it again. There is no relation between their house, and the quarry. They are talking like that. Thank you.

**24. Thiru.Dinesh Kumar, Orattukkupai :**

Hello everyone. My name is Dinesh Kumar. I come from Orattukuppai. The previous speakers have talked a lot about this. Goverenment generate income from these quarry. Many road facilities and other needs will be provided, and with this tax money, many benefits will be provided to village people. If this is the case, it will be good for the people. Similarly, many people are going out to work without getting employment. Have you give a license to the quarry like this, many people will get employment opportunities directly and indirectly, and we will also be benefitted from this. Therefore, I request you to grant a license to Satish Kumar quarry as soon as possible. Thank you.

**25. Thiru.Thilagavathi, Orattukkupai:**

We live next to the Orattukuppai quarry. My name is Thilagavathi. We have no problem. Please give them license. We ten people get work . We depend on the quarry for our survival. Before some time these people depend on us. But now oppose our project. We are relatives. My house is nearer to their farm. But my house does not have any cracks. Told that the roof tiles are falling due to this quarry. Thank you, greetings

**26. Thiru.Thangavel, Orattukkupai:**

Hello, my name is Thangavel. I come from Orattukuppai. My house is two hundred meters from the place where this quarry is being operated. All the people I have just mentioned are all beyond my house. First, we should be affected. All the houses are cracking. Second, the dust that comes out during blasting is very harmful. The water resources have reduced a lot. Anyone can say that they have 1500 feet deep borewell. But the water does not come from that quarry. They use the water for their own use. That water does not reach the agricultural lands. The rainwater does not go to the pond, but it is

collected in quarry pits. All the quarries are located nearby. My house is two hundred meters from the place where the quarry is being to be set up. I do not know if this distance is okay as per law, Please check and give me a license. Thank you.

**27. Thiru.Thiagarajan, Pachapalayam:**

My name is Thiagarajan, I come from Pachapalayam village. In my village, there is no PAP irrigation. There is no solution for water problem. Everyone is doing business with trucks. This quarry is useful for everyone. No one is without getting benefit. They can also follow the rules and do it properly. There are at least 20 families can be benefitted, due to this quarry. A license can be given. Thank you.

At the end of the meeting, the District Environmental Engineer thanked the District Revenue Officer who chaired the public hearing meeting and all the public and the police department officials. Thank you and greetings. He thanked everyone and said.

**No. of Petitions: 26**

| | |
|---|---|
| **District Environmental Engineer,** | 03/06/2025 **Special District Revenue Officer,** |
| **Tamil Nadu Pollution Control Board,** | **(Land Acquisition) State Highways,** |
| **Coimbatore South.** | **Coimbatore District** |

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், ஓரத்துக்குப்பை கிராமத்தில் கா.ச.எண்.203/1B-ல் 1.13.0 பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.R.சதீஷ்குமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது கோயம்புத்தூர் மாவட்டம், செட்டிபாளையத்திலுள்ள காயத்ரி மஹாலில் 29.05.2025 அன்று காலை 11 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.K. செந்தில் வடிவு | தனி மாவட்ட வருவாய் அலுவலர்<br>(நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலை<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2. | Dr.R.சந்திரசேகரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 3 | திரு.S.செந்தில்குமார் | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திரு. B சுவாமிநாதன் | திட்ட ஆலோசகர்,<br>கிரியேட்டிவ் என்ஜினீயர்ஸ் & கன்சல்ட்டண்ட்,<br>சென்னை |
| 5. | பொதுமக்கள் எண்ணிக்கை | 92 |

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை தாலுகா, ஓராட்டுக்குப்பை கிராமத்தில் க.ச எண் : 203/1B –ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.R.சதீஷ்குமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது மொத்த பரப்பளவு 1.13.00 ஹெக்டர்ஸ் ஆகும். இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துகொள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006 ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொது மக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களான முறையே தினமலர்மலர் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 22.04.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இந்த கூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பர பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிசுரங்கள் மூலம் பொது மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது, இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரணக் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்க உரை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும் அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்யுமாறும் இவை அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்துள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார் அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துக்களை பதிவு செய்வது கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினர்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு. B சுவாமிநாதன் கிரியேட்டிவ் என்ஜினீயர்ஸ் & கன்சல்ட்டண்ட் சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்ககாட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**1. திரு.நாகராஜ் செட்டிபாளையம் :**

மாவட்ட வருவாய்அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் அவர்களுக்கும் வணக்கம். இங்கிருக்கும் எல்லோருக்கும் வணக்கம். நான் செட்டிபாளையத்திலிருந்து வருகிறேன். எங்களுக்கு இந்த குவாரி இங்கு வரவேண்டும். அதற்க்கு முழு சம்மதம். காரணம் பார்த்திட்டோமென்றால் நிறைய பேருக்கு வேலை கிடைக்கும். அது போக லோடுமேன் வண்டி இயக்குபவர்கள் போன்றோர் நிறைய பேருக்கு வேலை கிடைக்கும். அதனால் இந்த குவாரி இங்கு வருவதில் எங்களுக்கு முழுசம்மதம். நன்றி.

**2. திரு.சதீஷ் ஓராட்டுகுப்பை :**

சார் வணக்கம். என் பெயர் சதீஷ். ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். இந்த குவாரி இங்கு வருவதினால் நேரடியாக வரும் வேலைவாய்ப்பு இல்லாமல் மறை முகமாகமாய்

நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். குவாரி வருவதில் எங்களுக்கு முழு சம்மதம் , எந்த ஆட்சேபனையும் இல்லை. நன்றி.

3. **திரு.சௌந்தர்ராஜன் :**

பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற, ,மாவட்ட வருவாய்அலுவலர் அவர்களுக்கும், மற்றும் மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் அவர்களுக்கும் இங்கே கலந்து கொண்ட அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இப்பகுதியிலே குவாரி வருவது மிகவும் அத்தியாவசியமாக இருக்கின்றது. என்னை போன்ற கட்டுமான தொழிலாளர்கள் பத்து குடும்பங்கள் இதனை நம்பி வாழ்கின்றார்கள். மிகவும் அவசியம். அதுமட்டுமில்லாமல் கனிம வளத்துறை மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் நிதியை கிராம மக்களினுடைய பயன்பாட்டிற்கு செலவிட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது என்று கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

4. **திரு.சௌமியா, ஓராட்டுகுப்பை :**

வணக்கம் என் பெயர் சௌமியா. நான் ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன், இந்த குவாரி வந்தால் கற்களின் டிமாண்ட் குறைவாக இருக்கும். அதனாலே ரேட் குறையும். எல்லோருக்கும் உபயோகமா இருக்கும். அதனாலே குவாரி வருவதற்கு எங்களுக்கு சம்மதம்.

5. **திரு.ஆதீஷ் :**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் ஆதீஷ், குவாரி இங்கே வருவதனால் construction துறையிலே எல்லோருக்கும் பொருட்கள் கிடைக்கும் என்பதால் குவாரி இங்கே வருவதில் எனக்கு சம்மதம்.

6. **திரு.சாந்தி, ஓராட்டுகுப்பை :**

என் பெயர் சாந்தி. நான் ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். சதீஷ்குமாருக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எனக்கு சம்மதம்.

7. **திரு.யோகேஷ் :**

வணக்கம். நான் ஓராட்டு குப்பையிலிருந்து வருகிறேன். என் பெயர் யோகேஷ். சதீஷ்குமாருக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை.

8. **திரு.சுரேஷ்குமார் மயில் & கோ, ஓராட்டுகுப்பை :**

வணக்கம். நான் ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். நான் மயில் & கோ பில்டர்ஸ். என்னை நம்பி பத்து பேர் வேலை செய்கிறார்கள். கல் குழி இருக்கும் போது பொருட்கள் குறைவான விலையில் கிடைத்தது. இப்போது ரொம்ப டிமாண்டாக உள்ளது. வெளியிலிருந்து வாங்கும்படி உள்ளது.

9. **திரு.ஷண்முகம், ஓராட்டுகுப்பை :**

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் ஷண்முகம். செட்டிபாளையம் ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். இந்த கல் குவாரி அமைவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

10. **திரு.வினோத் குமார், பெரியகுயிலி :**

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் வினோத் குமார். பெரியகுயிலியிலிருந்து வருகிறேன். குவாரிகளுக்கெல்லாம் அனுமதி கிடைக்காததனால் கட்டுமானப் பொருட்களெல்லாம் விலை அதிகமாகிக் கொண்டே வருகிறது. இதனாலே எல்லோருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. அதனாலே லைசென்ஸ் கொடுப்பதை முறைப்படுத்தி சீக்கிரம் வழங்கினால் எல்லோரும் பயனடைவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

11. **திரு.கார்த்திக் ,பெரியகுயிலி :**

என் பெயர் கார்த்திக். நான் . பெரியகுயிலியிலிருந்து வருகிறேன். இப்போது டிரைவர், ஆப்பரேட்டர் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு குறைவாக உள்ளது. இந்த மாதிரி குவாரிகள் அதிகமாக வந்தால் வேலை தட்டுப்பாடு நீங்கும். பொருட்கள் தேவை அதிகமா உள்ளது. குவாரிகள் நிறைய இருந்தால் பொருட்களின் தேவையை பூர்த்தி பண்ண முடியும். அதனாலே குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பது நல்லது என்று எண்ணுகிறேன்.

**12. திரு.மாதவன், ஓராட்டுகுப்பை :**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் மாதவன். ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பது நல்லது தான். அதனால் நிறைய தொழிலாளர்களுக்கு உபயோகமாக. இருக்கும். உரிமம் கொடுக்கலாம். நன்றி.

**13. திரு. கலை சிவம், செட்டிபாளையம் :**

எல்லோருக்கும் வணக்கம். நான் செட்டிபாளையத்திலிருந்து வருகிறேன். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இதனாலே இங்கே இருப்பவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதற்க்கு எங்களுக்கு முழு சம்மதம்.

**14. திரு. S K பிரபு ,சின்னியம்பாளையம் :**

என் பெயர் பிரபு. சின்னியம்பாளையத்திலிருந்து வருகிறேன். மூலப் பொருட்கள் தட்டுப்பாடு அதிகமா இருக்கிறதனாலே கான்ஸ்டரக்சன் எல்லாமே ரொம்ப பாதித்து உள்ளது. இது கொடுப்பதினால் கொஞ்சம் டிமாண்ட் குறையும் என்று எதிர் பார்க்கிறேன்.

**15. திரு.பரணி, செட்டிபாளையம் :**

வணக்கம். என் பெயர் பரணி. நான் செட்டிபாளையத்திலிருந்து வருகிறேன். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அது மட்டுமல்லாமல் கவர்மெண்ட்டிலிருந்து நிறைய ப்ரொஜெக்ட்டல்லாம் பண்ணுவதால்

அதற்கான கட்டுமான பொருட்களெல்லாம் எதுவுமே சரியா சப்ளை இல்லை. நூற்றுக்கு நாற்பது பர்செண்ட்டேஜ் மட்டும் தான் சப்ளை ஆகிறது. மீதி டிமாண்ட் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அது எதனாலே என்றால் கல் தான் மூல பொருள். அதிலிருந்துதான் ப்ளூ மெட்டல்ஸ் எல்லாம் தயாரிக்கப் படுகிறது. அதனாலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து சீக்கிரமா லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி .

16. திரு.முருகன் ,கள்ளப்பாளையம் :

வணக்கம். நான் கள்ளப்பாளையத்திலிருந்து வருகிறேன். மூலப்பொருட்கள் கிடைப்பது எல்லா பக்கமும் டிமான்டாக இருக்கிறது. அதனாலே தொழிலாளர்கள் நிறைய பாதிக்கபடுகிறார்கள். இந்த குவாரிக்கு உரிமம் கொடுப்பதினாலே நிறைய பொது மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிமுகமாகும். உரிமம் கொடுப்பதினாலே எந்த ஒரு பாதிப்பும் இல்லை என்று நினைக்கிறேன் வணக்கம்.

17. திரு.வேலுசாமி, பெரியகுயிலி :

என் பெயர் வேலுசாமி . நான் பெரியகுயிலியிலிருந்து வருகிறேன். கல்குவாரியெல்லாம் கம்மியா இருப்பதினால் கல், ஜல்லியெல்லாம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. வெளி மாநிலத்திலிருந்து வாங்குவதால் விலை அதிகமாக இருக்கிறது. அதனாலே சதீஷ்குமார் என்பவருக்கு லைசென்ஸ் கொடுப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை எனபதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**18. திரு.லோகேஷ் செட்டிபாளையம் :**

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் லோகேஷ். நான் செட்டிபாளையத்திலிருந்து வருகிறேன். இந்த குவாரி திறப்பதில் எந்த பிரச்சனையும் இல்லை. ஏனென்றால் குவாரி திறக்கப்பட்டால் ஆனால் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அதிகமா கிடைக்கும். நன்றி.

**19. திரு.ஆறுச்சாமி , பச்சாபாளையம் .**

கல் இல்லாததால் தொழில் முடங்கி உள்ளது. சீக்கிரம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

**20. திரு.விஜயகுமார் :**

என் பெயர் விஜயகுமார். இந்த கல் குவாரி ஆரம்பிக்கப் போகிற புலத்தின் அருகிலிருந்துதான் வந்திருக்கிறேன். எங்களுக்கு இந்த கல் குவாரி ஆரம்பிக்கப் போவதற்கான எந்த நோட்டீசும் கொடுக்கவே இல்லை. இங்கே இருக்கும் யாராவது இந்த புலத்திற்கு சம்மந்தப்பட்டிருக்கிறார்களா? எங்களுக்கு தகவலே கொடுக்கவில்லை, இந்த மீட்டிங் யாருக்காக நடக்கிறது? பொது மக்களுக்காக நடக்கிறது. இங்கு இருப்பவர்கள் யாரவது இந்த புலத்திற்கு சம்மந்தப்பட்டிருக்கிறார்களா? இந்த கல் குவாரி இருக்கிற ஏரியாவுக்கு சம்மந்தப்பட்டிருக்கிறார்களா? நோட்டீசே கொடுக்கவில்லை.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:** நீங்கள் எந்த ஊர்?

**விஜயகுமார்** : ஓராட்டுக்குப்பை

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : ஓராட்டுக்குப்பையில் விளம்பரம் வைத்திருக்கிறார்களா?

**விஜயகுமார்** : எதுவுமே கொடுக்கவில்லை .

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** :

உதவி சுற்றுச்சுழல் பொறியாளரிடம், "ஓராட்டுக்குப்பையில் எந்த இடத்தில் ஹாண்ட் அவுட் கொடுத்தீர்கள்?" என்று வினாவினார்.

**விஜயகுமார்** : எந்த இடத்தில் வைத்திருக்கிறார்கள் என்று போட்டோ போட்டு காட்ட சொல்லுங்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** :

ஒரு நிமிடம் இருங்கள், திட்ட ஆலோசகர் எந்த இடத்தில் கொடுத்துள்ளார்கள் என்று போட்டு காண்பியுங்கள்.

**விஜயகுமார்** :

இது எந்த ஏரியாவுக்கு சம்பந்தப்பட்டது? போட்டோ போட்டிருப்பது எந்த ஏரியாவுக்கு சம்பந்தப்பட்டது என்று நீங்களே கேட்டு சொல்லுங்கள். சம்மந்தமில்லாத ஒரு ஏரியாவிலே போட்டு இருக்கிறார்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் :**

ஒரு நிமிடம் இருங்கள். அதாவது 14.09.2006ன் சட்டப்படி இரண்டு தினசரிகளில் விளம்பரம் கொடுக்கப் பட வேண்டும். அதுதான் சட்டத்தில் இருக்கிறது. பொதுமக்கள் அதிகமாக அவர்களுடைய கருத்துக்களை சொல்லவேண்டுமென்பதற்காக இந்த மாதிரி நோட்டீஸ், பிளெக்ஸ் பேனர் எல்லாமே வைத்திருக்கிறோம். சட்டப்படி கிடையாது. இந்த விழிப்புணர்வு கூடுதலாக செய்யப்பட்டுள்ளது.

**விஜயகுமார் :**

என்னுடைய லேண்டை ஒட்டின மாதிரி இருக்கிறது. சம்பந்தம் இல்லாத இடத்தில் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் சம்பந்தப்பட்ட எனக்கு நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டுமல்லவா? இல்லை சம்பந்தப்பட்ட ஏரியாவில் உள்ளவர்களுக்காகவாவது நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டுமல்லவா? மீட்டிங்கையே மறைத்துதான் பண்ணி இருக்கிறார்கள். ஏரியாவில் யாருக்குமே நோட்டீஸ் கொடுக்கவில்லை. இதில் என்னவென்றால் ஒரு கிராமத்தில் இருந்து மற்றொரு கிராமத்திற்கு போகிற ரோட்டையே கட் பண்ணி இருக்கிறார்கள். கட் பண்ணிதான் இந்த கல் குவாரிக்கு கல் உடைக்க அப்ளை பண்ணி இருக்கிறார்கள். ஏற்கனவே இது சமமந்தமா நாங்க நிறைய நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம் ஸ்டே ஆர்டர் வாங்குவதற்கும் கூட பேசிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் சம்பந்தம் இல்லாத இடத்தில் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் சம்பந்தப்பட்ட எங்களுக்கு கொடுக்கவில்லை. இன்பார்ம் ஆவது பண்ணி இருக்கவேண்டுமல்லவா?

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் :**

உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள். உங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவில்லை என்பதை சொல்லுங்கள். அதை பதிவு பண்ணிக்க கொள்ளலாம்.

**விஜயகுமார் :**

ஏன் நோட்டீஸ் கொடுக்கவில்லை? அதில் பாதிப்பு அடைவது நாங்கள் தான். சம்மந்தமில்லாதவர்கள் இங்கே இருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கிறவர்கள் பாதிப்பு அடைந்தவர்கள் ஏர் பொல்யூஷனாலும் சரி, வாட்டர் ஆனாலும் சரி சம்மந்தப்பட்ட அதில் பாதிப்பு அடைவது நாங்கள் தான். ஏன் எங்களுக்கு கொடுக்கவில்லை? எதற்க்காக மறைத்து பண்ணவேண்டும்? தப்பு பண்ணுவதினாலே தான் மறைத்து பண்ணுகிறீர்கள்

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : தேவை இல்லாமல் பேசக் கூடாது.

**விஜயகுமார்** : தேவை இல்லாமல் பேசவில்லை. எங்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டுமல்லவா?

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : அமைதியாக கேளுங்கள் சட்டப்படி என்ன இருக்கிறதோ அதை பண்ணி இருக்கோம்

**விஜயகுமார்** : சரிங்க

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : சட்டப்படி தினசரியில் விளம்பரம் கொடுக்கவேண்டும்.

**விஜயகுமார்** : சரிங்க

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**

நீங்கள் வந்து நோட்டிஸ் கொடுக்கவில்லை, பிளெக்ஸ் வைக்கவில்லை என்ற உங்கள் கருத்துக்களை பதிவு பண்ணி இருக்கிறோம். வேறு ஏதாவது கருத்துக்கள் இருந்தா சொல்லுங்கள்.

**விஜயகுமார்** : இல்லை. ஒன்றுமில்லை ஒரு ஒரு வில்லேஜில் இருந்து

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**: திருப்பி திருப்பி அதையே சொல்லாதீங்க சார்

**விஜயகுமார்** : சரிங்க

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** :

ஒரு தடவை சொல்லி விட்டீர்கள்

விஜயகுமார் : சரிங்க

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** :

வேறு கருத்துக்கள் இருந்தால் சொல்லுங்கள் நீங்கள் சொன்ன கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது நோட்டீஸ் கிடைக்கவில்லை என்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது வேறு கருத்துக்கள் எதாவது இருக்கா?

**விஜயகுமார் :**

ஏற்கனவே எங்க ஏரியாவிலே கல் குவாரிகளிலே தண்ணீரில் வெடி மருந்து கலந்து வாசம் வந்து கொண்டிருக்கிறது. ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கிறோம். தண்ணியோட ஸ்டோரேஜ் மட்டம் ரொம்ப கீழே போய்விட்டது. சுத்தமாகவே தண்ணீர் இல்லை. கல் குவாரிகள் தோண்டி அது மூலமா தண்ணி எடுத்து வருவது கூட கல் குவாரிக்காரர்களேதான் எடுத்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். கல் குவாரி ஆரம்பிப்பதனால் பக்கத்தில் இருக்கிற விவசாயிகள் எங்களுக்கு என்ன கிடைக்கும். ஏற்கனவே, ஒவ்வொரு முறையும் நாங்கள் அப்ஜெக்ஷன் பண்ணிக்க கொண்டு தான் இருக்கிறோம் வவர கல்குவாரி அதிகமாகிக் கொண்டேதான் இருக்கிறது. ஆனால் அரசு விதிப்படி எதுவுமே பண்ணவில்லை.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:** சொல்லுங்க சார் உங்க கருத்துக்களை சொல்லுங்கள்

**விஜயகுமார் :** சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன்

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் :** தண்ணீர் பாதிப்பு வருகிறது, நிலத்துக்கு பாதிப்பு வருகிறதென்றால் சொல்லுங்கள்

**விஜயகுமார் :** தண்ணிக்கு பாதிப்பு வருகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் :** அந்த மாதிரி சொல்லுங்கள்

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் :** அந்த மாதிரி சொல்லுங்கள் சொல்லி முடியுங்கள் அவ்வளவுதானா வேறு ஏதாவது இருக்கா?

21. **திரு.ஜெயபால்** :

பெயர் ஜெயபால். நாங்கள் குவாரி அமைவதற்கு பக்கத்தது தோட்டம். தம்பி சொல்கிறமாதிரி எல்லா ஊரிலிருந்தும் கூட்டிக் கொண்டு வந்துதான் ஓவொருவரையும் பேச வைத்திருக்கிறார்கள். நாங்கள் பக்கத்து தோட்டத்துக்காரர் எங்களுக்கு தெரியவில்லை. பத்து திசைகளிலிருந்து இங்கே வந்திருக்கிறோம். யாருக்காக இருந்தாலும் அந்த ஆதங்கம் இருக்கும். ஒன்னு நீங்க அனுமதி கொடுக்கிற குவாரிக்கு பக்கத்திலேயே பார்த்தால் பத்து அடி தூரத்தில் கவர்மெண்ட் குவாரி இருக்கிறது இரண்டாவது நீங்கள் கொடுக்கிற குவாரி புலத்திற்கும் சூலூர் பகுதியிலே வரும் புலத்திற்கும் பார்த்தால் அதுக்கும் பத்து அடி தூரம் கூட இருக்காது . அப்போ இந்த குவாரியும் தோண்டி, ஏற்கனவே இரண்டு குவாரியுமே ஆழமா இருக்கிறது. இரண்டு குவாரியும் தோண்டி உள்ளே போக போக விபத்து நடக்க அதிகமா வாய்ப்பு இருக்கிறது. காலம் காலமா இருந்த நீரோடை அதில் இருக்கிறது அதை ஆக்கிரமிப்பு பண்ணித்தான் இப்போ இந்த குவாரிக்கு இடம் பண்ணி இருக்கிறார்கள். இதிலே சேப்டின்னு சொல்லி விடுவதற்கு அங்கே எங்கே இடம் இருக்கிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : அந்த மாதிரி சொல்லுங்கள் சொல்லி முடியுங்கள் அவ்வளவுதானா வேறு ஏதாவது இருக்கா?

**திரு.ஜெயபால்** :

நீங்கள் சொல்கிறமாதிரி எங்களுடைய கிணறெல்லாம் எழுபது அடியில் இருக்கிறது. இந்த குவாரி தோண்டினால் எத்தனை அடி ஆழம் போகும். அப்போ எழுபது அடியில் இருக்கிற

கிணற்றுக்கு தண்ணி வருமா? ஆழம் போகிற கல்லு குழிக்கு தண்ணி போகுமா? அதுமட்டுமில்லைங்க வைப்ரேசன் காரணமா வீடெல்லாம் விரிசல் நாங்களெல்லாம் சிமெண்ட் ஷீட்டும் ஓடும் போட்டு இருக்கிறோம் அதெல்லாம் என்ன ஆகும் என்று யோசித்து அதற்கு தகுந்த மாதிரி ஏன்ன செய்யணுமோ செய்யுங்க. ஏற்கனவே நிறைய பாறை இருக்குது. இருக்கிற பாறையை உடைத்து எல்லாம் பண்ணி இருக்கிறார்கள் ஒன்றுமில்லை அல்ட்ரா சஹாரா குவாரி அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமா எடுத்து பைன் போடுவதாக சொன்னார்கள் சொல்லி இருக்கிற மண்ணை பூரா தோண்டி அந்த குவாரியை மூடி அதுக்கு லைசென்ஸ் அப்ளை பண்ணி இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் சட்டத்திற்கு புறம்பாக பன்றதுக்கு நீங்கள் உரிமம் கொடுத்துக் கொண்டிருந்தால் பக்கத்திலிருக்கும் தோட்டத்துக்காரர்களெல்லாம் எங்கே போவது? அதே மாதிரி நீங்கள் குவாரி கொடுக்குமிடம் உயரம் அதிகம் எங்களது தோட்டம் இருப்பதெல்லாம் தாழ்வான பகுதி அதிலிருந்து வரும் பொல்லுசன் என்ன பண்ணும் ?எப்படி போதும்? ஒரு குவாரியில் ஒரு கம்ப்ரெஸ்ஸர் ஓட்டி ஒரு வண்டி உடைத்துதான் எடுக்கவேண்டும். இங்கே எல்லாம் ஐந்து கம்ப்ரெஸ்ஸர், ஆறு கம்ப்ரெஸ்ஸர் ஓடுது. ரிக் வேட்டு போடுகிறார்கள். ரிக் வேட்டு போட்டா வைப்ரேஷன் வீடு அப்படியே ஆடுது இங்கிருக்கும் எல்லாருமே அவர்களுடைய சொந்தம் பந்தம் தான் அவர்களுக்கு சாதகமா சொல்கிறார்கள். எங்களுடைய பிரச்னையை யார் தீர்ப்பது நாங்கள் எங்கே போய் தீர்ப்பது சொல்லுங்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

சார் உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள் அடுத்தவர்கள் அவர்களுடைய கருத்துக்களை சொல்லிவிட்டார்கள்.

**ஜெயபால் :**

இங்கிருந்து பத்து கிலோ மீட்டருக்கு அந்தப்பக்கம் இருப்பவர்களுக்கு பிரச்சனை தெரியாதுங்க.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

உங்களுடைய கருத்துக்களை கேட்டுக்கொண்டு இருக்கிறோம் நீங்கள் அடுத்தவர்களை பற்றி பேசவேண்டாம். இது பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம். இல்லையென்றால் மனு கொடுங்கள் அதில் குறைகள் என்றால் சுரங்கத்துறைக்கு மனு கொடுங்கள்.

**ஜெயபால் :**

ஒரு குவாரிக்கும் மற்றொரு குவாரிக்கும் இடையே தூரம் குறைவாக இருக்கிறது. அதனால் உரிமம் கொடுக்க கூடாது என்பது என்னுடைய கருத்து.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : வேறு யாராவது பேசுகிறீர்களா?

**22.திருமதி. R . ராஜேஸ்வரி :**

அனைவருக்கும் வணக்கம். நான் தொப்பையன் காட்டிலிருந்து வந்திருக்கிறேன் அவர்கள் இருக்கிற பக்கத்தில்தான் இருக்கிறேன். கல் உடைத்ததெல்லாம் வேறு ஆட்கள் உடைத்தார்கள் அப்போதெல்லாம் நீரோடை என்று எந்த எதிர்ப்பை எதுவும் தெரிவிக்கவில்லை. இப்போது நாங்கள் வாங்கி இருக்கிறோம் தூரமாகத்தான் சாலை

இருக்கிறது. இருந்தாலும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். உடைத்ததெல்லாம் வேறு ஆட்கள் உடைத்தார்கள் நாங்கள் அதற்கு சம்மந்தப்படவில்லை கல் உடைப்பதால் எந்த பாதிப்பும் வராது. நன்றி வணக்கம்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** : வேறு யாராவது பேசுகிறீர்களா?

**23.திரு.வேலுசாமி,**

வணக்கம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு, இவர்கள் சொல்வதற்கு முன்னால் நான் இருக்கிறேன். என் பெயர் வேலுசாமி. என்னுடைய தோட்டத்திற்கு அந்தப்பக்கம்தான் இவர்கள் இருக்கிறார்கள். கல்குவாரிக்கு கிட்டத்தட்ட அரைகிலோமீட்டர் அந்த பக்கம் இருக்கிறார்கள் நான் இருக்குறது 1000 அடி தூரத்திற்குள் இருக்கிறேன். நானும் அங்கேதான் வீடு கட்டி 50 வருசமா குடி இருக்கிறேன். அந்த மாதிரி அதிர்வு எதுவும் கிடையாது. கல் குழி காலம் காலமாக ஓடிக் கொண்டுதான் இருக்கிறது. இவர்கள் சொல்வது போல் கல் குவாரி தோண்டுவதினால் தண்ணீர் வராமல் போவதற்கு வாய்ப்பே கிடையாது. வானம் பொழிந்தால் பூமி விளைகிறது. வானமே பொழியவில்லையென்றால் தண்ணீர் எங்கிருந்து வரும். கல் குவாரி இருப்பதினால் இவர்களுக்கு நல்லது தான். கல் குவாரி தண்ணீரை எடுத்து பூமிக்குள்ளே தான் விடுகிறார்கள். அந்த தண்ணீரில் தான் விவசாயம் பண்ணுகிறார்கள். அங்கே ஏழு, எட்டு விவசாயிகள் கல் குழியை நம்பித்தான் அந்த குவாரியிலிருந்து வரும் தண்ணீரைக் கொண்டு விவசாயமே பண்ணிக்க கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் சொல்கின்ற மாதிரி நான் குவாரிக்கு முன்னால் இருக்கிறேன். இவர்கள் எல்லாம் குவாரிக்கு பின்னால் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் சொல்வது போல்

அதிர்வோ அல்லது வேறு பாதிப்போ வருவதற்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் நேரடியாக பார்த்து இருப்பீர்கள். படத்தையும் பார்த்து இருப்பீர்கள். இன்னும் வேண்டுமானால் ஒருமுறை பாருங்கள். நாங்கள் இருக்கும் வீட்டிற்கும், இவர்கள் இருக்கும் வீட்டிற்கும் குவாரி இருக்கும் இடத்திற்கும் சம்மந்தமே இல்லைங்க. அந்த மாதிரி பேசுகிறார்கள். நான் வெளிப்படையாக பேசுகிறேன். நன்றி.

24.திரு.தினேஷ்குமார்:

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் தினேஷ்குமார். ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். இதற்கு முன்னால் பேசியவர்கள் நிறைய பேசினார்கள். ஆனால் இது போல் குவாரிகள் வரும் போது தான் அரசுக்கு தேவையான வருமானமும் இருக்கும். அதை வைத்து தான் நிறைய சாலை வசதிகளும் மற்ற தேவைகளும் இந்த வரிப் பணத்தின் மூலம் செய்யப்படும். ஒவ்வொரு கிராமத்திற்கும் நிறைய சலுகைகள் வரும். இது இருந்தால் தான் மக்களுக்கும் நல்லது. அதே போல் வேலைவாய்ப்பு இல்லாமல் நிறையபேர் வெளியில் வேலைக்கு போய்க் கொண்டு இருக்கிறார்கள். இது போல் குவாரிக்கு உரிமம் கொடுத்தீர்கள் என்றால் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் நாங்களும் இதனால் பயன் பெறுவோம். அதனால் சதீஷ் குமார் குவாரிக்கு சீக்கிரமாக உரிமம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

**25.திலகவதி ஓராட்டுகுப்பை:**

குவாரிக்கு பக்கத்தில் குடி இருக்கிறோம். பெயர் திலகவதி. எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லைங்க. தாராளமா உரிமம் கொடுக்கலாம். நாங்கள் பத்து பேர் வேலை செய்வோம். அதை நம்பித்தான் பிழைக்கிறோம். ஆனால் எல்லோரும் போட்டிக்கு சொல்கிறார்கள் எங்களால் தான் அவர்கள் இவ்வளவு நாள் பிழைத்தார்கள். ஆனால் இப்போது எங்களுக்கு எதிர்ப்பாக பேசுகிறார்கள். அது தவறு. என்னை கேட்டாலும் பரவாயில்லை. சொன்னதும் என் உறவினர் தான். அவர்கள் பூமியும் என் வீடும் ஒரே இடத்தில் இருக்கிறது. ஆனால் என்வீடு எந்த விரிசலும் இல்லை. அவர்களுக்கு மட்டும் ஓடு விழுகிறது என்று சொல்லுகிறார்கள். நன்றி, வணக்கம்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:** அடுத்து வேறு யாராவது பேசுகிறீர்களா?

**26..திரு.தங்கவேல்,, ஓராட்டுகுப்பை**

வணக்கம் என் பெயர் தங்கவேல். நான் ஓராட்டுகுப்பையிலிருந்து வருகிறேன். இந்த குவாரி அமைக்கின்ற இடத்தில் இருந்து இருநூறு மீட்டரில் தான் என் வீடு இருக்கிறது. இப்போது சொன்னவர்கள் எல்லாம் என்னுடைய வீட்டை தாண்டி தான் எல்லாருமே இருக்கிறார்கள். முதலில் எங்களுக்கு பாதிப்பு ஆகிறது. வீடுகளெல்லாம் விரிசல் வருகிறது. இரண்டாவது வெடி வைக்கும் போது வருகின்ற தூசி ரொம்பவும் பாதிக்கிறது. நீர்வளம் மிகவும் குறைந்து விட்டது. யார் வேண்டுமானாலும் 1500 அடி போர் ஓட்டி இருக்கிறேன் என்று சொல்லலாம் ஆனால் அந்த குவாரியிலிருந்து தண்ணீர் அங்கே மட்டும் தான் இருக்கிறதே தவிர வெளியில் வருவது இல்லை. அவரவர் குவாரி உபயோகத்திற்கு மட்டும்

தான் வெடுத்துக் கொள்கிறார்கள். விவசாய நிலங்களுக்கு அந்த தண்ணீர் வருவதில்லை. மழை நீர் குட்டைக்கு போவதில்லை ஒவ்வொரு பாறையிலும் அப்படியேதான் நிற்கிறது. எல்லா குவாரியும் அருகருகேதான் இருக்கிறது. குவாரி அமைக்கின்ற இடத்தில் இருந்து இருநூறு மீட்டரில் தான் என் வீடு இருக்கிறது. உரிமம் கொடுப்பதற்கு இந்த தூரம் ஓகேவா என்று தெரியவில்லை. பார்த்துவிட்டு உரிமம் கொடுக்கவேண்டும் நன்றி.

**27. திரு.தியாகராஜன், பச்சாபாளையம்:**

என் பெயர் தியாகராஜன், பச்சாபாளையம் கிராமத்தில் இருந்து வருகிறேன் என் கிராமத்துல பிஏ பி பாசனம் நீர் பாசனம் எதுமே கிடையாது நீர் பாசனத்துக்கு உண்டான தீர்வு கிடையாதுங்க எல்லாரும் லாரி வைத்து தொழிலை பண்ணிட்டு இருக்காங்க இந்த குவாரினால எல்லாருக்கும் உபயோகம் தான் யாரும் உபயோகம் இல்லாமல் இல்லைங்க அவர்களும் வண்டி வாகனம் வச்சிருக்காக அனுசரிச்சு பண்ண முடியும் இலதை நம்பித்தாங்க நிறைய குடும்பம் இருக்கு ஒரு குவாரி என்றால் குறைந்தது 20 குடும்பம் பயனடையும் லைசென்ஸ் தரலாம். நன்றி.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் பேசும் போது இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் மற்றும் காவல் துறை நண்பர்கள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் சார்பாக நந்தியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது. நன்றி வணக்கம். எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**மனுக்களின் எண்ணிக்கை : 26**

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்,**
**(நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலை**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**